## மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் 25.08.2020 அன்று கள ஆய்வு விவரங்கள்

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் முன்னிலையில் நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையாளருடன் இணைந்து நெல்லிக்குப்பம் நகராட்சி பகுதிகளில் 25.08.2020 அன்று காலை 12.00 மணியளவில் கள ஆய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

- நெல்லிக்குப்பம் நகர பேருந்து நிலையம் செயல்படவில்லை என்று வரப்பட்ட புகாரின் அடிப்படையில் நேரடி ஆய்வு செய்தார். பேருந்து நிலையம் முழுவதும் தூய்மைப்பணி மேற்கொண்டு குப்பைகள் அனைத்தும் அகற்றுமாறு தெரிவித்தார். மேலும் அவ்வழியாக செல்லும் அனைத்து பேருந்துகளையும் பேருந்து நிலையத்திற்குள் கண்டிப்பாக உள்ளே வந்து செல்ல நடவடிக்கை எடுக்குமாறு நகராட்சி மற்றும் காவல் துறைக்கு தெரிவித்தார். மேலும், பயணிகள் நிற்கும் இடத்திற்கு பயணிகள் காத்திருப்புக் கூடம் (Passenger waiting Shed) அமைக்குமாறு நகராட்சி ஆணையாளரிடம் தெரிவித்தார். மேற்படி பேருந்து நிலையத்தினுள் சட்ட விரோதமாக நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களை பறிமுதல் செய்து அபராதம் விதிக்குமாறு தெரிவித்தார்.
- நகராட்சி ஆரம்ப சுகதார நிலையத்தின் உட்கட்டமைப்பு வசதி, தினமும் கொரானா பரிசோதனை எடுக்கப்படும் விவரம் மற்றும் அதன் முடிவுகளை மருத்துவ அலுவலரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டார்.
- ஜெயலட்சுமி நகரில் உள்ள தனிமைப்படுத்தப்பட்ட வீட்டினை ஆய்வு மேற்கொண்டு பேரிகார்டு, பேனர் மற்றும் கிருமி நாசினி தெளிப்பது தொடர்பான விவரங்களை கேட்டறிந்தார். அங்கு பணிபுரிந்து கொண்டிருந்த திரு.கஜேந்திரன், திரு.புஷ்பநாதன் மற்றும் திரு. செல்வகுமார் ஆகிய தூய்மை பணியாளர்கள் பணி செய்வதை ஆய்வு செய்து கிருமி நாசினி தெளிக்கும் விவரங்கள் குறித்து கேட்டறிந்தார்.
- நெல்லிக்குப்பம் நகராட்சியில் மழைக்காலங்களில் மழை நீர் வடிகாலாக அமையும், பொதுப்பணி துறைக்கு சொந்தமான வெள்ளப்பாக்கத்தான் வாய்க்காலின் நீள, அகலம் மற்றும் எல்லைகள் ஆகியவற்றை ஆவணங்கள் மூலம் அறிந்து கொண்டார். இந்த ஆண்டு மழை பொழிவு அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதால், தூர்வாரும் பணியினை உடனடியாக செப்டம்பர் 5ம் தேதிக்குள் முடிக்க அறிவுரை வழங்கியதோடு, மேலும் இவ்வாய்க்காலினை நேரில் செப்டம்பர் 5ம் தேதி மறு ஆய்வு செய்யவுள்ளதாகவும் தெரிவித்தார்.

- திருக்கண்டேஸ்வரம் நகராட்சி நடுநிலைப்பள்ளியினை ஆய்வு செய்தார். பள்ளியின் உட்கட்டமைப்பு வசதிகளை தலைமையாசிரியர் மற்றும் இதர ஆசிரியர்களிடமும் கேட்டறிந்தார். மேலும், குப்பை தொட்டிகளை வளாகத்தில் தேவைப்படும் இடத்தில் வைக்குமாறும், தடுப்பு சுவற்றின் உயரத்தினை அதிகரிக்குமாறும் நகராட்சி ஆணையரிடம் தெரிவித்தார். மேலும், நகராட்சிக்கு சொந்தமான பள்ளிகளின் உள்கட்டமைப்பு வசதிகளை ஒவ்வொன்றாக மேம்படுத்துமாறு தெரிவித்தார்.
- கே.எஸ்.ஏ.ஆர். ரோடு பிரதான சாலையில் அமைந்துள்ள நகராட்சி பேருந்து நிலையம், கீதா இனிப்பகம் மற்றும் திருக்கண்டேஸ்வரம் சாலையில் அமைந்துள்ள உணவகம் ஆகிய இடங்களில் முகக்கவசம் மற்றும் சமூக இடைவெளியின்றி நின்றுக் கொண்டிருந்த பொது மக்களிடம் கொரானா தொற்று பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தியதோடு மட்டுமின்றி பொது மக்களுக்கு இலவசமாக முகக்கவசம் வழங்கி பாதுகாப்பாக இருக்குமாறு மேற்படி மக்களுக்கு தெரிவித்தார்.

ஆணையாளர், 28/8/2020
நெல்லிக்குப்பம் நகராட்சி.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
கடலூர் மாவட்டம்.

பெறுநர்:-

சம்பந்தபட்ட அலுவலர்கள்,
(உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு)

நகல்:-

1. நகராட்சி ஆணையாளர், நெல்லிக்குப்பம்,
2. நகராட்சி பொறியாளர் (பொ),நெல்லிக்குப்பம்
3. நகராட்சி துப்புரவு அலுவலர், நெல்லிக்குப்பம்
4. நகராட்சி நகரமைப்பு ஆய்வர் (பொ) நெல்லிக்குப்பம்